**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>**
**<u>அ.வ.எண்.96/2020</u>**
**<u>நாள்.22.08.2024</u>**

2024ம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் தேதி இன்னாசி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திருமதி. P. சந்தோசம், இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================================

| | |
|---|---|
| பெயர் = இன்னாசி | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = |

==========================================================================

**<u>PW 1 மு.வி</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

19.06.2019ம் தேதியிட்ட எனது பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 16.05.2018ம் தேதியிட்ட எனது பெயரில் ஏற்பட்ட விடுதலை ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், தாவா சொத்தை பொருத்த கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 29.01.2020ம் தேதியிட்ட நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு கைநகல் வா.சா.ஆ.4 ஆகவும், மேற்படி புகாரை காவல்துறையினர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை எண்ணிக்கை – 3 அசல் வா.சா.ஆ.5 ஆகவும்,

29.02.2020ம் தேதியிட்ட நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு கைநகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது)

(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு 19.09.2024ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)